# இன்றைய இறைவார்த்தை

# ஜூலை 25

## புனித யாக்கோபு – திருத்தூதர் – திருவிழா

**முதல் வாசகம்:**

இயேசுவின் சாவுக்குரியத் துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோம்.

**திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம். 4 : 7 – 15**

சகோதரர் சகோதரிகளே, கடவுளின் மாட்சியாகிய செல்வத்தை மண்பாண்டங்கள் போன்ற நாங்கள் கொண்டிருக்கிறோம். இந்த ஈடு இணையற்ற வல்லமை எங்களிடமிருந்து வரவில்லை. அது கடவுளுக்கே உரியது என்பது இதிலிருந்து விளங்குகிறது. நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்துபோவதில்லை. குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை. துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்பட்டாலும் அழிந்து போவதில்லை. இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்குச் சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோம். இயேசுவின் வாழ்வு சாவுக்குரிய எங்கள் உடலில் வெளிப்படுமாறு உயிரோடு இருக்கும் போதே நாங்கள் அவரை முன்னிட்டு எந்நேரமும் சாவின் வாயிலில் நின்று கொண்டிருக்கிறோம். சாவின் ஆற்றல் எங்களிலும் வாழ்வின் ஆற்றல் உங்களிலும் வெளிப்படுகிறது. "நான் கடவுள் மீது நம்பிக்கையோடு இருந்தேன். ஆகவே பேசினேன்" என்று மறைநூலில் எழுதியுள்ளது. அதற்கொப்ப நம்பிக்கை மனப்பான்மை கொண்டுள்ள நாங்களும் நம்புகிறோம். ஆகவே பேசுகிறோம். ஆண்டவர் இயேசுவை உயிர்த்தெழச் செய்த கடவுளே எங்களையும் அவரோடு உயிர்த்தெழச் செய்து அவர் திருமுன் நிறுத்துவார். உங்களையும் அவ்வாறே நிறுத்துவார் என்பது எங்களுக்குத் தெரியும். இவை அனைத்தும் உங்கள் நன்மைக்கே நிகழ்கின்றன. இறையருள் பெறுவோரின் தொகை பெருகப் பெருக அவர்கள் கடவுளுக்குச் செலுத்தும் நன்றியும் பெருகும். இதனால் கடவுள் போற்றிப் புகழப்படுவார்.

**ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா உமக்கு நன்றி.**

**பதிலுரைப் பாடல்:**

**திருப்பாடல்: 126 : 1 – 2, 2 – 3, 4 – 5, 6 (பல்லவி 5)**

**பல்லவி: கண்ணீரோடு விதைப்பவர்கள் அக்களிப்போடு அறுவடை செய்வார்கள்.**

1. சீயோனின் அடிமை நிலையை ஆண்டவர் மாற்றின போது, நாம் ஏதோ கனவு கண்டவர் போல இருந்தோம். அப்பொழுது, நமது முகத்தில் மகிழ்ச்சி காணப்பட்டது. நாவில் களிப்பாரவாரம் எழுந்தது. பல்லவி

2. “ஆண்டவர் அவர்களுக்கு மாபெரும் செயல் புரிந்தார்” என்று பிற இனத்தார் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல் புரிந்துள்ளார். அதனால் நாம் பெரு மகிழ்ச்சியுறுகின்றோம். பல்லவி

3. ஆண்டவரே! தென்னாட்டின் வறண்ட ஓடையை நீரோடையாக வான் மழை மாற்றுவது போல, எங்கள் அடிமை நிலையை மாற்றியருளும். கண்ணீரோடு விதைப்பவர்கள் அக்களிப்போடு அறுவடை செய்வார்கள். பல்லவி

4. விதை எடுத்துச் செல்லும் போது அழுகையோடு செல்கின்றார்கள். அரிகளைச் சுமந்து வரும் போது அக்களிப்போடு வருவார்கள். பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:** (யோவான் 15:16)

அல்லேலூயா, அல்லேலூயா!

“நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை. நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன்,” என்கிறார் ஆண்டவர்.

அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

என் கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள்.

✠ தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 20 : 20 – 28

அக்காலத்தில் செபதேயுவின் மனைவி தம் மக்களோடு ஒரு வேண்டுகோள் விடுக்குமாறு இயேசுவிடம் வந்து பணிந்து நின்றார். “உமக்கு என்ன வேண்டும்?” என்று இயேசு அவரிடம் கேட்டார். அவர், “நீர் ஆட்சி புரியும் போது என் மக்களாகிய இவர்கள் இருவருள் ஒருவன் உமது அரியணையின் வலப்புறமும் இன்னொருவன் இடப்புறமும் அமரச் செய்யும்” என்று வேண்டினார். அதற்கு இயேசு, “நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கப் போகும் துன்பக் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா?” என்று கேட்டார். அவர்கள், “எங்களால் இயலும்” என்றார்கள். அவர் அவர்களை நோக்கி, “ஆம், என் கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள். ஆனால் என் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் அமரும்படி அருளுவதோ எனது செயல் அல்ல. மாறாக அவ்விடங்களை என் தந்தை யாருக்கு ஏற்பாடு செய்திருக்கிறாரோ அவர்களுக்கே அவை அருளப்படும்” என்றார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த

பத்து பேரும் அச்சகோதரர் இருவர் மீதும் கோபம் கொண்டனர். இயேசு அவர்களை வரவழைத்து, "பிற இனத்தவரின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகின்றார்கள். உயர்குடி மக்கள் அவர்கள் மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள். இதை நீங்கள் அறிவீர்கள். உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது. உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும். இவ்வாறே மானிட மகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" என்று கூறினார்.

**கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**
**கிறிஸ்துவே உமக்குப் புகழ்.**

**சிந்தனைக்கு:**

அருமையான தாய், பிள்ளைகளுக்கு நல்ல முன்மாதிரி. அந்தத் தாய் யாக்கோபு, யோவான் என்னும் சீடர்களுக்கு தாய் என்பதை மாற்கு 10:35 மூலம் யூகிக்க முடிகிறது. இயேசுவின் மௌனம் அந்த தாயின் செயலுக்கு சம்மதம். ஒவ்வொரு தாயும் தன் குழந்தைகளை இறைவனிடம் அழைத்து வர வேண்டும். அவர்களுக்காக இறை உதவியை மன்றாட வேண்டும் என்பதற்கு மிகச் சிறந்த சான்று. அற்புதமான குடும்ப செபத்திற்குச் சான்று. சிறு வயது முதல் குழந்தைகளைக் குடும்பமாக இறை உணர்வோடு வளர்த்ததால் இன்றும் அந்த இளைஞர்களை இயேசுவிடம் அழைத்து வந்து இப்படி ஒரு வேண்டுதலை வைக்க இந்தத் தாய் வருகிறாள்.

ஆம். இறை உறவில் உருவாக்கப்படும் குழந்தைகள் எச்சுமையையும் சுமக்கவும், எந்த துன்பக் கிண்ணத்திலும் குடிக்க இயலும். அதற்கான எல்லா ஆற்றலும் வலிமையும் அவர்கள் பெருகிறார்கள். இயேசு குறிப்பிடும் இத்துன்பக் கிண்ணம் அவரது இறுதி உணவையும் (லூக்கா 22:20) அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பையும் (லூக்கா 22:42) உணர்த்துகிறது. இத்துன்பக் கிண்ணம்தான் வாழ்வின் வெற்றியையும் நிறைவையும், வலப்பக்கத்தையும் இடப்பக்கத்தையும் நிர்ணயம் செய்வது. இக்கிண்ணத்தைப் பருகாமல் வாழ்வில் மகிழ்வை, உயர்வை அனுபவிக்க முடியாது. வாழ்வில் நாம் சந்திக்கும் துன்பங்கள் துயரங்கள், வேதனைகள் சோதனைகள் எல்லாம் வெற்றியின் அடையாளங்கள், வளர்ச்சியின் வாசல் படிகள். "இயேசுவே! எங்கள் குழந்தைகள் வாழ்வில் உயர்வடைந்து உம் வலப்பக்கமும் இடப்பக்கமும் அமர அருளும்," என நாம் அனைவரும் வேண்டுவோம். வாழ்த்துக்கள். ஆசீர்.

**********